தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

13.07.2013

**நுண்ணீர் பாசனத் திட்டத்தால் 2000 விவசாயிகள் பயனடைவர்**

கடலூர் மாவட்டத்தில் நுண்ணீர் பாசனத் திட்டம் மூலம் 2,000 விவசாயிகள் பயனடைவர் என மாவட்ட ஆட்சியர் ரா.கிர்லோஷ்குமார் தெரிவித்தார்.

பருவமழை பெய்யாததால் ஆண்டுதோறும் நாம் தண்ணீருக்காகப் போராட வேண்டியுள்ளது. நிலத்தடி நீர் மட்டம் கோடை காலத்தில் குறைவது போதிய மழையில்லாததால் மீண்டும் உயருவதில்லை. இதன் காரணமாக விவசாயம் செய்வதில் பெரும் பிரச்னையாக உள்ளது. புஞ்சை நிலத்தில் பயிர் செய்யப்படும் தோட்டக்கலை பயிர்களுக்கு அடிக்கடி தண்ணீர் பாய்ச்சுவது அவசியம். இந்த தண்ணீரை சிக்கனமாகவும், குறைந்த தண்ணீரை அதிக இடங்களுக்கு பாய்ச்சவும் நுண்ணீர் பாசனம் அறிமுகப்படுத்தப்பட்டது.

அதற்கான தேசிய நுண்ணீர் பாசனத் திட்ட சிறப்பு முகாம் கடலூர் டவுன் ஹாலில் புதன்கிழமை நடந்தது.

முகாமில், மாவட்ட ஆட்சியர் ரா.கிர்லோஷ்குமார் பேசியது: தண்ணீர் பிரச்னையை எதிர்நோக்கியுள்ள தமிழகத்தில் குறைந்த தண்ணீரைக்கொண்டு பயிர் செய்வதற்காக அரசு மானிய உதவியுடன் கூடிய நுண்ணீர் பாசனத் திட்டத்தை கொண்டு வந்துள்ளது. கடலூர் மாவட்டத்தில் 1077 ஹெக்டேரில் பிற பயிர்களுக்கும், 700 ஹெக்டேரில் தோட்டக்கலை பயிர்களுக்கும் நுண்ணீர் பாசனம் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஐந்து ஏக்கருக்கு குறைவாக உள்ள சிறு, குறு விவாயிகளுக்கு 100 சதவீதமும், பிற விவசாயிகளுக்கு 75 சதவீத மானியம் அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் 2,000 விவசாயிகள் பயன்பெறுகின்றனர். இத்திட்டம் விவசாயிகளிடம் விழிப்புணர்ச்சி ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக நுண்ணீர் பாசனத் திட்ட சிறப்பு முகாம் நடத்தப்படுகிறது என்றார்.

முகாமுக்கு தோட்டக் கலைத்துறை துணை இயக்குநர் ராஜேந்திரன் வரவேற்றார். உதவி இயக்குநர் ராமலிங்கம் உள்ளிட்டோர் பங்கேற்றனர். கரும்பு ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் ஜெயச்சந்திரன், விருத்தாசலம் வேளாண் அறிவியல் பேராசிரியர் அருணாசலம், நபார்டு உதவி பொது மேலாளர் ராஜகோபால், பாலூர் காய்கறி ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் கலைமணி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**பயிர் மருத்துவ பயன்பாட்டு மையம் தொடக்கம்**

விருதுநகர் மாவட்டத்தில் விவசாயிகள் பயனடையும் வகையில் வேளாண்மை கூட்டுறவு வங்கிகளால் பயிர் மருத்துவ பயன்பாட்டு மையம் தொடங்கப்பட்டுள்ளது என்று கூட்டுறவுத்துறை மண்டல இணைப்பதிவாளர் ஜி.குருமூர்த்தி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது: விவசாயிகள் பயனடையும் வகையில் வேளாண்மை துறை மூலமும், கூட்டுறவு துறை மூலமும் அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. தற்போது, விவசாய உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் கூட்டுறவு வங்கிகளில் பயிர் மருத்துவ பயன்பாட்டு மையம் தொடங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் விருதுநகர் மாவட்டத்தில் தொப்பலாக்கரை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், முகவூர் உழவர் பணிக்கூட்டுறவு சங்கம், வத்திராயிருப்பு கூட்டுறவு கிராமிய கடன் சங்கம் ஆகிய வங்கிகளில் இம்மையம் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்த மையம் மூலம் குறிப்பாக விளை நிலத்தின் தன்மை, நீரின் தன்மையை அறிந்து கொண்டு விவசாய உற்பத்தியை அதிகரிப்பதற்கான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்காக குறிப்பிட்ட பகுதியில் பயிர் மருத்துவ பயன்பாட்டு மையம்

அமைக்கப்பட்டுள்ளது. இங்கு, நீர் மற்றும் நிலத்தை பரிசோதனை செய்து, அதற்கேற்ப உரங்களை பயன்படுத்த வேண்டும். அதேபோல், நீரின் கார அமிலத் தன்மை அறிந்து அதற்கேற்ப அறிவுரைகளும் வழங்கப்படுகிறது. இதுபோல் செய்வதால் விவசாயிகள் தங்கள் நிலங்களில் பயிர் சாகுபடி அதிகப்படுத்தலாம். இதேபோல், விவசாய கள ஆய்வும் நேரில் மேற்கொள்ளப்பட்டு ஆலோசனைகளும் வழங்கப்பட இருக்கிறது. இந்த வாய்ப்பை விவசாயிகள் அனைவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என இணைப்பதிவாளர் ஜி.குருமூர்த்தி தெரிவித்தார்.

**உழவர் மன்றங்கள் துவக்க விழா**

திருப்புல்லாணி பகுதியில் உள்ள பல்வேறு கிராமங்களில் நபார்டு வங்கியின் கட்டுப்பாட்டில் உள்ள உழவர் மன்றங்கள் துவக்க விழா நடைபெற்றது.

ராமநாதபுரம் மாவட்ட நபார்டு வங்கி உதவிப் பொதுமேலாளர் மதியழகன் தலைமை வகித்து, திருப்புல்லாணி பகுதியில் உள்ள பல்வேறு கிராமங்களில் நபார்டு உழவர் மன்றங்களைத் துவக்கி வைத்தார்.

விவசாயத்துக்குத் தேவையான தொழில்நுட்பம் மற்றும் ஆலோசனைகளை நபார்டு வங்கியின் மூலம் நியமிக்கப்பட்டுள்ள உழவர் மன்றங்கள் வாயிலாக செயல்படுத்தி வருவதாகவும், பண்ணைக்குட்டைகள் அமைக்க அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

திருப்புல்லாணி வட்டாரத்தில் சிலம்பி நாடு, வண்ணான்குண்டு வலசை, களிமண் குண்டு, மொங்கன் வலசை, சிலையப்பன் வலசை, பொக்கரேனந்தல், நேருபுரம் மற்றும் திருப்புல்லாணி ஆகிய பகுதிகளில் நபார்டு உழவர் மன்றங்கள் துவக்கி வைக்கப்பட்டன.

விழாவில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிச் செயலர் முருகன், ரமேஷ், பி.எம்.டி. தொண்டு நிறுவனச் செயலர் எம்.கொப்புளான் ஆகியோர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**வறட்சியில் காய்ந்து கருகும் கரும்புத் தோட்டம்**

சத்தியமங்கலம் பகுதியில் பருவமழை பொய்த்ததால் கிணறுகளில் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து, 100 ஏக்கர் கரும்பு பயிர் காய்ந்து கருகுகின்றன.

சத்தியமங்கலம் சுற்று வட்டார கிராமங்களான நஞ்சப்பகவுண்டன்புதூர், மாரனூர், நடுப்பாளையம் காலனி, செண்பகபுதூர், வேடசின்னானூர், பெரியூர், உக்கரம், மேட்டுர், ஜல்லியூர் உள்ளிட்ட கிராமங்கள் கீழ்பவானி வாய்க்காலையொட்டி அமைந்துள்ளன.

இப்பகுதி விவசாயிகள் அதிக அளவில் கரும்பு பயிரிட்டுள்ளனர். கடந்த ஆண்டு பருவமழை பொய்த்ததால் பவானிசாகர் அணையிலிருந்து கீழ்பவானி வாய்க்காலில் நன்செய் பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படவில்லை. இதனால் வாய்க்காலையொட்டியுள்ள கிணறுகளில் நீர்மட்டம் குறைந்து வற்றிவிட்டது.

விவசாயிகள் பயிரிட்டுள்ள கரும்பு பயிருக்கு நீர் பாய்ச்ச இயலவில்லை. கிணறுகளை ஆழப்படுத்தவோ, புதிய ஆழ்குழாய் கிணறுகள் அமைக்க அதிக செலவு ஏற்படும் என்பதால் விவசாயிகள் கரும்பு பயிருக்கு நீர் பாய்ச்ச முடியாமல் கால்நடைகளை கரும்புத் தோட்டத்தில் மேய்ச்சலுக்கு விட்டுள்ளனர்.

சுற்று வட்டார கிராமங்களில் 100 ஏக்கர் பரப்பிலான கரும்புகள் காய்ந்துள்ளதால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

**நாற்றங்கால் அமைக்கும் பணியில் வேளாண் பல்கலைக்கழக மாணவிகள்!**

கோபி அருகே நாற்றங்கால் அமைக்கும் பணியில் கோவை வேளாண்மை பல்கலைக்கழக மாணவிகள் ஈடுபட்டனர்.

கோபியில் தடப்பள்ளி-அரக்கன்கோட்டை வாய்க்கால்கள் மூலமாக 24,504 ஏக்கர் பரப்பிலான விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. இந்த வாய்க்கால்களில் முதல்போக நெல் சாகுபடிக்காக கடந்த 28-ஆம் தேதி தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

இதையடுத்து வயல்களில் உழவு செய்தல், நாற்றங்கால் அமைத்தல், விதை நெல் தூவுதல் உள்ளிட்ட பணிகளை விவசாயிகள் மேற்கொண்டுள்ளனர். இந்நிலையில் கோவை வேளாண்மை பல்கலைக்கழகத்தில் இறுதியாண்டு படிக்கும் மாணவிகள் பரணி, சிசிலியாகார்மல், பிரியங்கா, ராகவி, தரணி பிரியா, இந்து மீனா, கே.கே.லூலூ உள்ளிட்ட 7 பேர் களப்பணி பயிற்சிக்காக கோபியில் தங்கி உள்ளனர்.

இவர்கள் செய்யாம்பாளையம்-தடப்பள்ளி பாசன பகுதிகளில் விவசாயிகளை சந்தித்து பேசினார்கள். அதைத்தொடர்ந்து, விவசாயி ஒருவரின் வயலில் இறங்கி மேட்டுப்பாத்தி நாற்றங்கால் அமைக்கும் பணியில் ஈடுபட்டனர் . மேலும், விவசாயிகள் கலந்து வைத்திருந்த உரங்களை எடுத்து வயல்களில் இட்டனர்.

இதைத்தொடர்ந்து திருந்திய நெல் சாகுபடி முறைகள், அவற்றின் நன்மைகள், சாதாரண நெல் நடவுக்கும், திருந்திய நெல் நடவுக்கும் உள்ள வேறுபாடுகள் உள்ளிட்டவை குறித்து விளக்கமளித்தனர்.

சாதாரண நெல் நடவு முறையை காட்டிலும் திருந்திய நெல் நடவு முறையில் 20 முதல் 30 சதவீதம் வரை கூடுதல் மகசூல் கிடைக்கிறது. மேலும், பூச்சி நோய் தாக்குதல், எலிகளின் தொல்லை உள்ளிட்டவை குறைகிறது என்று விவசாயிகளுக்கு மாணவிகள் விளக்கமளித்தனர்.

கோபி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ஆசைத்தம்பி மற்றும் விவசாயிகள் உடனிருந்தனர்.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 63.27 அடி**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை நிலவரப்படி 63.27 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 3,637 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 700 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 8.36 டி.எம்.சி.

**நீலகிரியில் மழை**

நீலகிரி மாவட்டத்தில் தொடர்ந்து பரவலாக மழை பெய்து வருகிறது. வெள்ளிக்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் மாவட்டத்தில் 141 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

மழை விவரம் (மி.மீ.):

நடுவட்டம்-36, தேவாலா-28, கிளன்மார்கன்-18, கூடலூர்-12.2, அவலாஞ்சி-11, அப்பர்பவானி-10, கேத்தி-7.2, கெத்தை-6, உதகை-4, எமரால்டு-3, குன்னூர்-2.6, கோத்தகிரி, கல்லட்டி, பர்லியார் தலா 1.

**நீலகிரியில் மழை**

நீலகிரி மாவட்டத்தில் தொடர்ந்து பரவலாக மழை பெய்து வருகிறது. வெள்ளிக்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் மாவட்டத்தில் 141 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

மழை விவரம் (மி.மீ.):

நடுவட்டம்-36, தேவாலா-28, கிளன்மார்கன்-18, கூடலூர்-12.2, அவலாஞ்சி-11, அப்பர்பவானி-10, கேத்தி-7.2, கெத்தை-6, உதகை-4, எமரால்டு-3, குன்னூர்-2.6, கோத்தகிரி, கல்லட்டி, பர்லியார் தலா 1.

**"குறுவை சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு ரூ. 18 கோடி நிதி'**

ஆழ்குழாய் மூலம் குறுவை நெல் சாகுபடி செய்துள்ள டெல்டா விவசாயிகளின் வாழ்வாதாரத்தை காக்க ரூ. 18 கோடி நிதியினை தமிழக முதல்வர் ஒதுக்கீடு செய்துள்ளார் என வேளாண்மைத்துறை அமைச்சர் எஸ். தாமோதரன் கூறினார்.

திருச்சி மாவட்டம், லால்குடியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விழாவில் 2939 ஹெக்டேரில் குறுவை நெல் சாகுபடி செய்த 3,847 விவசாயிகளுக்கு முழு மானியத்துடன் கூடிய உயிர் உரம், நெல் நுண்சத்து உரம், தாவர பூச்சிக்கொல்லி மருந்து, ஜிப்சம்,பைப் குழாய் போன்றவைகளை வழங்கி அமைச்சர் மேலும் பேசியது:

விவசாய உற்பத்தியை பெருக்க வேண்டுமென்பதற்காகத்தான் ஆண்டுதோறும் உழவர் பெருவிழா நடத்தி வருகிறோம். இந்த ஆண்டு குறுவைக்கு பாசன நீர் கிடைக்க பெறாததால் மின் மோட்டார், ஆழ்குழாய்  கிணறு கொண்டு குறுவை நெல் சாகுபடி செய்த விவசாயிகளுக்கு முழு மானியத்துடன் கூடிய விவசாய இடுபொருட்கள் வழங்க தமிழக முதல்வர் உத்தரவின் பேரில்  லால்குடியில் முதன் முதலாக இத்திட்டம் தொடங்கி வைக்கப்படுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன் என்றார் அவர்.

விழாவில் கதர் மற்றும் கிராமத்தொழில்கள் துறை அமைச்சர் டி.பி. பூனாட்சி, அரசு கொறடா ஆர். மனோகரன், மாவட்ட ஆட்சியர் ஜெயஸ்ரீமுரளிதரன், வேளாண்மைத்துறை முதன்மைச் செயலர் பண்டித் சக்சேனா, வேளாண்மைத்துறை இயக்குநர் ராஜேந்திரன் ஆகியோர் தமிழக அரசு விவசாயத்துக்கும், விவசாயிகளுக்கும் செய்துள்ள, செய்து வருகிற திட்டங்களை குறித்துப் பேசினர். சட்டப்பேரவை உறுப்பினர்கள் இந்திராகாந்தி (துறையூர்), சந்திரசேகரன்

(மணப்பாறை), வேளாண்மைத்துறை இணை இயக்குநர் பி. குருராஜசிங், உதவி இயக்குநர் மரியரவி ஜெயகுமார், ஒன்றியக்குழுத் தலைவர் நளாயினிநாகராஜன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**விவசாயிகள் உண்ணாவிரதம்**

வறட்சி மற்றும் சூறைக்காற்றால் பாதிக்கப்பட்ட வாழைகளுக்கு நிவாரணம் வழங்க வலியுறுத்தி திருச்சி, கரூர் மாவட்ட வாழை சாகுபடி விவசாயிகள் சங்கம் சார்பில் திருச்சி சோமரசம்பேட்டை கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் முன்பு வெள்ளிக்கிழமை உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது.

கோரிக்கைகள்: திருச்சி மற்றும் கரூர் மாவட்டங்களில் வறட்சி மற்றும் சூறாவளி காற்றால் பாதிப்புக்குள்ளான வாழை விவசாயிகளுக்கு தற்போதைய செலவு, இழப்பு ஆகியவற்றை கணக்கில் கொண்டு நிவாரணம் வழங்க வேண்டும்.

அனைத்துப் பயிர்களுக்கும் நிவாரணம் வழங்குவதோடு பயிர்க் காப்பீடு செய்த மற்றும் காப்பீடு செய்யாத விவசாயிகளுக்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ள நிவாரண தொகையை முறையாகவும், விரைவாகவும் வழங்க வேண்டும். வணிக வங்கிகள், கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் பெற்றுள்ள அனைத்துக் கடன்களையும் மத்திய, மாநில அரசுகள் தள்ளுபடி செய்ய வேண்டும். தமிழக அரசு கோரியுள்ள வறட்சி நிவாரணத் தொகையை மத்திய அரசு உடனடியாக வழங்க வேண்டும். காவிரிப் பிரச்னையில் சுய அதிகாரம் கொண்ட காவிரி மேலாண்மை வாரியத்தையும், காவிரி நீர் ஒழுங்குமுறை குழுவையும் அமைக்க வேண்டும் என்பன உள்ளிட்டக் கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

உண்ணாவிரதத்துக்கு தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் அயிலை சிவசூரியன், தோட்டக்கலை பயிர்கள் உற்பத்தியாளர்கள் சங்க மாநிலத் தலைவர் புலியூர் ஏ. நாகராஜன் ஆகியோர் தலைமை வகித்தனர். திருச்சி வடக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் எம். ராஜசேகரன் தொடக்கவுரையாற்றினார்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் எஸ். குணசேகரன் எம்.எல்.ஏ., காவிரி டெல்டா பாசன விவசாயிகள் சங்கச் செயலர் காந்தி பித்தன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். நிறைவாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலர் த. இந்திரஜித் போராட்டத்தை நிறைவு செய்து வைத்தார்.

காவிரி பாசன விவசாயிகள் நலச் சங்க மாவட்ட துணைச் செயலர் கவுண்டம்பட்டி சுப்பிரமணியம், பாரதிய கிசான் சங்க மாநில துணைத் தலைவர் பி. அய்யாக்கண்ணு, வீரசேகரன் உள்ளிட்ட பல்வேறு விவசாய சங்கங்களைச் சேர்ந்தவர்கள், அரசியல் கட்சி நிர்வாகிகள் பங்கேற்றனர்.

**மேட்டூர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை மாலை 66.06 அடியாக இருந்தது.**

மேட்டூர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை மாலை 66.06 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 12,724 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 3,002 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.11

**கோழிப் பண்ணைகள் அமைக்க மானியம்: விண்ணப்பிக்க அழைப்பு**

""2013-14-ம் ஆண்டில் கிராம ஊராட்சிகளில் செயல்படுத்த பெரம்பலூர் மாவட்டத்திற்கு 5 ஆயிரம் கோழிகள் கொண்ட 75 பண்ணைகள் அமைக்க ரூ. 1 கோடியே 55 லட்சம் மானியமாக வழங்க அரசு தமிழக அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

இந்தத் திட்டத்தில் பயன்பெற விண்ணப்பிக்கும் நபரின் பெயரிலோ அல்லது குடும்ப உறுப்பினர்களின் பெயரிலோ நிலம் இருக்க வேண்டும். சாலை வசதி அவசியம். நிலத்தடி நீர் ஆய்வில் கோழிப்பண்ணை அமைக்க தகுதியானதாக நிலம் இருக்க வேண்டும்.

பல்வேறு கட்ட நடவடிக்கைகளுக்கு பிறகு தேர்வு செய்யப்படும் பயனாளிக்கு கோழிப்பண்ணை அமைக்க பயிற்சி அளிக்கப்பட்டு பண்ணைகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும், தமிழக அரசால் 25 சத மானியமாக ரூ. 2 லட்சத்து 6 ஆயிரத்து 250, மத்திய அரசின் முதலீட்டு நிதியிலிருந்து ரூ. 2 லட்சத்து 6 ஆயிரத்து 250 வழங்கப்படும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் அருகிலுள்ள கால்நடை மருந்தகம் அல்லது பெரம்பலூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் கூடுதல் விவரங்கள் பெற்று ஜூலை 25-ம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம். மேலும், விவரங்களுக்கு

04328- 276222, 9443530190 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம்" என ஆட்சியர் தரேஸ் அஹமது தெரிவித்துள்ளார்.

**வேளாண் அலுவலர்களுக்கு பயிர் மதிப்பீட்டாய்வு புத்தாக்கப் பயிற்சி**

நாகர்கோவிலில் வேளாண்மைத் துறை அலுவலர்களுக்கு பயிர் மதிப்பீட்டாய்வு புத்தாக்க பயிற்சி முகாம் வியாழக்கிழமை நடைபெற்றது.

தமிழ்நாடு பொருள் இயல் மற்றும் புள்ளியியல் துறை சார்பில் நாகர்கோவில் வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் வேளாண் அலுவலர்களுக்கு பயிர் மதிப்பீட்டாய்வு புத்தாக்க பயிற்சி நடைபெற்றது.

திருநெல்வேலி மண்டல புள்ளி இயல் இணை இயக்குநர் இ. சின்னமாரி முகாமை தொடக்கி வைத்தார். வேளாண் உதவி இயக்குநர் ப. நிக்கோலஸ் வரவேற்றார். தேசிய மாதிரி ஆய்வுத் திட்ட கண்காணிப்பாளர் செல்லம், புள்ளியியல் உதவி இயக்குநர் ராஜகோபால், துணை இயக்குநர் ஜே. ஜான்ஜஸ்டின்ராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முகாமில் பயிர் அறுவடை பரிசோதனைக்காக சர்வே எண் தேர்வு, சப்-டிவிசன் தேர்வு செய்தல், பரிசோதனை களம், திடல் அமைத்தல், அறுவடை ஆய்வு மேற்கொள்ளுதல், உலர் பரிசோதனை செய்தல், படிவங்களைப் பூர்த்தி செய்தல் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

வேளாண் அலுவலர்கள், துணை அலுவலர்கள், உதவி அலுவலர்கள், தோட்டக்கலை அலுவலர்கள், புள்ளிஇயல் அலுவலர்கள், ஆய்வாளர்கள் கலந்து கொண்டனர்.

தக்கலை, குருந்தன்கோடு, திருவட்டாறு, முன்சிறை, கிள்ளியூர், மேல்புறம் வட்டாரங்களில் உள்ள வேளாண் துறை மற்றும் தோட்டக்கலைத் துறை அலுவலர்களுக்கான பயிர் மதிப்பீட்டாய்வு குறித்த 2 நாள் பயிற்சி முகாம் ஜுலை 17 மற்றும் 18ஆம் தேதி தக்கலை வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தில் நடைபெறுகிறது.

**பண்ணைக்குட்டை விளக்கக் கூட்டம்**

சாத்தான்குளம் ஒன்றிய கூட்ட அரங்கில், பண்ணைக்குட்டை அமைப்பது குறித்து விளக்க கூட்டம் நடைபெற்றது.

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை உதவித் திட்ட அலுவலர் ஜெ.மைக்கேல் தலைமை வகித்தார். ஒன்றிய ஆணையர் வே. சங்கரநாராயணன், வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) பாக்கியவதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஒன்றிய அளவிலான ஊராட்சித் தலைவர்கள் மற்றும் ஊராட்சிச் செயலர்கள் கலந்துகொண்டனர். அவர்களுக்கு ஊராட்சி பகுதியில் பண்ணை குட்டை அமைப்பது குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது.

**விவசாயிகளுக்கு எதிரான பட்ஜெட்**

கர்நாடகத்தில் விவசாயிகளுக்கு எதிரான பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று, முன்னாள் முதல்வர் எடியூரப்பா தெரிவித்தார்.

இதுகுறித்து வெள்ளிக்கிழமை செய்தியாளர்களிடம் அவர் கூறியது:

கர்நாடகத்தில் காங்கிரஸ் கட்சி ஆட்சி பொறுப்பேற்றப்பின் முதல் முறையாக முதல்வர் சித்தராமையா பட்ஜெட் தாக்கல் செய்துள்ளார். இதில், விவசாயிகளுக்கென்று தனியாக பட்ஜெட் எதையும் தாக்கல் செய்யவில்லை.

ஆனால், நான் முதல்வராக இருந்த போது, விவசாயிகளுக்கான தனி பட்ஜெட்டை தாக்கல் செய்தேன். அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள மக்களவைத் தேர்தலை மனதில் கொண்டு இந்த பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வருவாய்க்குத் தேவையான எந்த புதியத் திட்டங்களும் இந்த பட்ஜெட்டில் இல்லை.

கலால் வரி உயர்த்தப்பட்டுள்ளது. பாக்யலட்சுமி, சுவர்ணபூமி கைவிடப்பட்டுள்ளது. விவசாயிகளின் வளர்ச்சிக்குத் தேவையான நிதி ஒதுக்கவில்லை. விவசாயிகளின் கடன் தள்ளுபடி குறித்த விளக்கம் எதுவும் இல்லை.

பால் உற்பத்தியாளர்களுக்கு ரூ. 2 மானியம் வழங்குவதாகத் தெரிவித்த அரசு, அவர்களுக்கு இன்னும் பாக்கித் தொகையை வழங்கவில்லை.

ஒரு ரூபாயில் ஒரு கிலோ அரிசித் திட்டத்திற்கு ரூ.4,500 கூடுதல் செலவு ஆகும் என தெரிவித்த அரசு, அதற்கான நிதியை ஒதுக்கவில்லை.

மொத்தத்தில் விவசாயிகள், கிராம வளர்ச்சி, நீர்ப்பாசனத்திற்கு எதிரான பட்ஜெட்டை காங்கிரஸ் அரசு தாக்கல் செய்துள்ளது என்றார் எடியூரப்பா.

**இயற்கை வேளாண் முறையை ஊக்குவிக்க ரூ.25 கோடி**

கர்நாடகத்தில் தோட்டக்கலை பயிர்களை இயற்கை வேளாண் முறையில் பரியிடுவதை ஊக்குவிப்பதற்காக, நிதிநிலை அறிக்கையில் ரூ.25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நிதிநிலை அறிக்கையில் தோட்டக்கலைத் துறை குறித்த அறிவிப்புகள்:

தோட்டக்கலைப் பயிர்களை சுற்றுச் சூழலுக்கு இணக்கமான முறையில் பயிரிடுவதை உறுதி செய்ய, இயற்கை வேளாண் முறையை ஊக்குவிக்கம் விதமாக, ரூ.25 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இதன்மூலம், 82.5 ஆயிரம் ஏக்கரில் இயற்கை வேளாண் முறையில் தோட்டக்கலைப் பயிர்கள் பயிரிடப்படும்.

சாமராஜ்நகர் மாவட்டம், ஹொண்டர்பாலு கிராமத்தில் இயங்கிவரும் நஞ்சுண்டசாமி நினைவு அம்ருதா பூமி அறக்கட்டளை சார்பில், இயற்கை வேளாண் முறையில் பயிரிடுவது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வருவதால், அந்த அறக்கட்டளையின் செயல்பாட்டை ஊக்குவிக்க ரூ.5 கோடி வழங்கப்படும்.

மாதுளைச் செடிகளில் ஏற்பட்டுவரும் பாக்டீரியாவால் ஏற்படும் நோய்களால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள, மாதுளை விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்க ரூ.12.5 கோடி வழங்கப்படும். தேங்காய் உற்பத்தியை மேம்படுத்தும் விதமாக, தேங்காய் பதனிடுதல் மையங்கள் அமைக்க தேசிய தேங்காய் வளர்ச்சி வாரியம் ஏற்கெனவே 25 சத மானியத்துடன் சேர்த்து கர்நாடக அரசும் 25 சத மானியம் வழங்கும்.

தேங்காயிலிருந்து மதிப்புக் கூட்டுப் பொருள்களைத் தயாரிக்க, மாநிலத்தில் 5 இடங்களில் தேங்காய் தொழில் பூங்காக்கள் அமைக்க ரூ.ஒரு கோடி

ஒதுக்கப்படும் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

**தலைநகரில் பரவலாக மழை**

தில்லியில் வெள்ளிக்கிழமை காலை முதல் மாலை வரை பரவலாக மழை பெய்தது.

மயூர் விஹார், வினோத் நகர், லட்சுமி நகர், ஐ.டி.ஓ., கஷ்மீரி கேட், முனிர்கா, துவாரகா, தௌலகுவான், இந்தியா கேட், ரஃபி மார்க் உள்ளிட்ட பல இடங்களில் மழை பெய்தது.

மதிய வேளையில் மழை பெய்ததால் பள்ளி முடிந்து வீடு திரும்பிய குழந்தைகள் மழையில் நனைந்தவாறு செல்வதைக் காண முடிந்தது.

மழை காரணமாக லட்சுமி நகர், ஐ.டி.ஓ., கஷ்மீரி கேட் பகுதிகளில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

இது குறித்து, வானிலை ஆய்வு மையத்தினர் கூறுகையில், "இதமான வானிலை தொடரக்கூடும். சில இடங்களில் மழை பெய்வதற்கான வாய்ப்புகள் உள்ளன.

காற்றில் ஈரப்பதம் ஏற்ற, இறக்கத்துடன் இருக்கும்' என்றனர்.

வெள்ளிக்கிழமை குறைந்தபட்ச வெப்பநிலை 27.3 டிகிரி செல்சியஸாக இருந்தது. தில்லியில் சில தினங்களாக இதமான வானிலை நிலவுகிறது.

அவ்வப்போது மிதமான மழை பெய்து வருகிறது. வெயிலின் தாக்கம் ஏற்ற, இறக்கத்துடன் காணப்படுகிறது.

இதனால், கடுமையான வெப்பம் மற்றும் புழுக்கத்தின் தாக்கத்திலிருந்து தில்லிவாசிகள் நிம்மதியடைந்துள்ளனர்.

**நீர் நிலைகளைப் பாதுகாப்போம்**

நீரின்றி அமையாது உலகு' என்பது வள்ளுவர் வாக்கு. புவியில் மூன்றில் இரண்டு பங்கு தண்ணீரால் ஆனது. மனித உடலும் ஏறக்குறைய அதே கட்டமைப்பில்தான்

செயல்படுகிறது. கோடையில் நீர் நிலைகள் ஆவியாகி வற்றுவதுபோல் மனித உடலுக்கும் நீர் தேவை அதிகரித்து விடுகிறது.

கோடையில், தேவையான தண்ணீர் கிடைக்காதபோது, தாகத்தால் தவித்து விடுகிறோம். குடிக்க மட்டுமல்லாமல் குளிக்க, துணி துவைக்க, பாத்திரம் கழுவ, சமையல் செய்ய என அன்றாடம் தேவைப்படும் தண்ணீரின் அளவு கூடிக்கொண்டே போகிறது.

குறிப்பாக, பாசனத்துக்கும் தண்ணீர் தேவை. நீர்ப் பாசனத்துக்குப் போதிய தண்ணீர் இல்லை என்றால் உணவு தானிய உற்பத்தி முடங்கி விடுகிறது.

இப்படி மனித வாழ்வின் இன்றியமையாத தேவையாகிவிட்ட தண்ணீரை நாம் கிணறு, குளம், ஆறுகள் என பல வழிகளில் பெறுகிறோம்.

இந்த நீர் ஆதாரங்களை உரிய முறையில் பாதுகாத்துப் பலன் அடைவதே இயற்கைப் பாதுகாப்புக்கு உகந்தது. அறிவியல் வளர்ச்சி காரணமாக நிலத்தின் அடியில் உள்ள நீரைக் கண்டறிந்து ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து உறிஞ்சும் போக்கு ஏற்பட்டது.

இன்றைக்கு ஆழ்துளைக் கிணறுகள் இல்லாத வீடுகளே இல்லை என்ற அளவுக்கு நிலைமை மாறிவிட்டது. விவசாயப் பாசனத்துக்கும் ஆழ்துளைக் கிணறுகளே பெரும்பாலும் அமைக்கப்படுகின்றன. சுருக்கமாகச் சொன்னால், பூமியெங்கும் சல்லடையாகத் துளைத்து வைத்திருக்கிறோம்.

ஆழ்துளைக் கிணறுகள் காலத்தின் கட்டாயம் என்று வைத்துக் கொண்டாலும், நிலத்தடி நீர் அள்ளக் அள்ள குறையாமலா இருக்கும்? இதன் விளைவு, நிலத்தடி நீர் நாளுக்கு நாள் குறைந்துகொண்டே போகிறது. நிலத்தடி நீர் மிகவும் உறிஞ்சப்படும்போது, ஏற்படும் வெற்றிடத்தை நிரப்பக் கடல்நீர் புகுந்து உப்பு நீராகி விடுகிறது.

மனிதன் இன்று பெரும்பாலும் இந்த நீரையே பருகிக் கொண்டிருக்கிறான். இயற்கையான நீரில் இருக்கும் பலவகையான நுண் சத்துக்கள் ஆழ்துளைக் கிணற்று நீரில் இருப்பதில்லை. மனித உடல் சீராக இயங்குவதற்குத் தேவைப்படும் சத்துகள் கிடைக்காததால் பலவித நோய்களுக்கு ஆளாக வேண்டியிருக்கிறது.

இருப்பினும், நிலத்தடி நீர்மட்டம் குறையாமல் பாதுகாக்க உலக அளவில் சில வழிகள் கையாளப்படுகின்றன. தரிசு நிலங்களைக் கோடை காலத்தில் உழுது, மழைக் காலத்தில் அதில் நீர் பிடிப்பு ஏற்படுத்துவது, பயன்பாடு இன்றி தண்ணீர் தேங்கி நிற்கும் இடங்களைத் தேர்வு செய்து அவற்றில் ஆழ்துளைக் கிணறு அமைத்து நிலத்தடிக்கு நீரைச் செலுத்துவது, நீரோடைகள் மற்றும் ஆறுகளில் தடுப்பு அணைகள் கட்டி நீரைத் தேக்கி வைப்பது, மழை நீரை வீணாக வடிந்தோட விடாமல் தடுத்து நிலத்தடிக்குக் கொண்டு செல்வது என பல வழிகள் நிலத்தடி நீரை மேம்படுத்த கண்டறியப்பட்டுள்ளன. இவற்றை நாம் முறையாகச் செய்கிறோமா என்பதே கேள்வி. நிலத்தடி நீரை அதிக அளவு உறிஞ்சுவதை அனுமதிப்பதில் இன்னொரு ஆபத்தும் உள்ளது. பண வலிமை உள்ள ஒருவர் அதல பாதாளத்துக்கு ஆழ்துளைக் கிணறு அமைத்து ராட்சத மோட்டார் மூலம் நீரை வெளியேற்றி, பக்கத்துக் கிணறுகளை வற்ற வைத்து செயற்கையாக வறட்சியை ஏற்படுத்தி விட முடியும்.

சிறு விவசாயிகளை, விவசாயப் பணியில் இருந்து கூண்டோடு வெளியேற்றும் இந்தச் செயல், தெரிந்தோ தெரியாமலோ நாடு முழுவதும் நடந்து கொண்டிருக்கிறது. இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டியது மிக அவசியம். நகரங்களில் "ஃபில்டர்' குடிநீர் என்ற பெயரில் லாரிகளில் விநியோகம் செய்வது அதிகரித்துவிட்டது. பண வசதி உள்ளவர்கள் இந்த நீரை வாங்கி வைத்துக் கொள்கின்றனர். இவர்கள் நகராட்சியையோ, மாநகராட்சியையோ நம்பியிருப்பதில்லை. இதனால், குடிநீர் தேவையை மையமாக வைத்து வியாபார நிறுவனங்கள்தான் பெருகிக் கொண்டிருக்கின்றன. அவையும், ஆழ்துளைக் கிணறுகள் மூலம் உறிஞ்சப்படும் நீர்தான் என்பதை மறக்கக் கூடாது.

நகர்ப்புறங்களில் ஏற்கெனவே இருக்கின்ற நீர்நிலைகளைப் பாதுகாக்க சரியான திட்டங்கள் எதுவும் நடைமுறையில் இல்லை. ஒரு காலத்தில் ஆற்றில் இருந்து நேரடியாக இந்த நீர்நிலைகளுக்கு நீர் பாய்ந்து கொண்டிருந்த கால்வாய்ப் பாதைகள் ஆக்கிரமிக்கப்பட்டு, பட்டா நிலங்களாகி விட்டன.

நீர் நிலைகளைச் சுற்றிலும் கட்டடங்கள் கட்டி ஆக்கிரமித்துக் கொள்வதும் அதிகரித்து விட்டதால், அந்த நீர்நிலைகள் இருப்பதே வெளியில் தெரியாமல் மறைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. காலத்தின் கோலத்தால், அதே நீர் நிலைகள் ஒரு கட்டத்தில் கழிவு நீர் சேரும் இடமாகிக் காணாமல் போய் விடுகின்றன.

குளம், குட்டையாக இருந்தாலும், பெரிய நீர்த்தேக்கங்களாக இருந்தாலும் அவற்றை கோடைக் காலத்தில் மராமத்து செய்து கரையைப் பலப்படுத்தி, மழைக் காலத்தில் நீர் நிரம்புவதற்கு உரிய வழிவகை செய்தால் மட்டுமே நிலத்தடி நீரைப் பாதுகாக்க முடியும். தமிழகம் போன்ற மாநிலங்கள் சமவெளி பிரதேசங்கள் அதிகம் உள்ள பகுதியாக இருக்கின்றன. சரியான நீர்த் தேக்க வசதிகள் இல்லாததால், தண்ணீருக்காக அண்டை மாநிலங்களிடம் கையேந்த வேண்டிய பரிதாபம்தான் தொடர்கிறது.

எனவே, எதிர்காலச் சந்ததிகளைக் கருத்தில்கொண்டு நமது புவி அமைப்புக்கேற்ற நீர்த்தேக்க வழிகளை ஆராய்ந்து செயல்படுத்த வேண்டும். அப்போதுதான் எதிர்காலத்தில் சத்தான நீரைப் பருகும் வாய்ப்பைப் பெறுவோம்.

**"தமிழக வெப்பநிலை 2100-ஆம் ஆண்டில் 145 டிகிரியாக இருக்கும்'**



பருவநிலை மாற்றம் காரணமாக தமிழக வெப்பநிலை 2100-ஆம் ஆண்டு முடிவில் 145 டிகிரி (ஃபாரன்ஹீட்) என்ற அளவை எட்டும் என நிபுணர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாக உத்தரகண்டில் ஏற்பட்ட இயற்கைச் சீரழிவைப்போல் தமிழகத்திலும் ஏற்படும் அபாயம் உள்ளது என்றும் அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

"உத்தரகண்ட் பேரிடரும் இயற்கை சீரழிவும்' என்ற தலைப்பிலான கருத்தரங்கம் சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதில் சென்னை அண்ணா பல்கலைக்கழக பருவநிலை மாற்ற ஆராய்ச்சி மைய ஆராய்ச்சியாளர் ஏ. சலீம் கான் பேசியது:

பருவநிலை மாற்றப் பாதிப்பு எந்த அளவுக்கு இயற்கைச் சீரழிவை ஏற்படுத்தும் என்பதை உத்தரகண்ட் உலகுக்கு உணர்த்தியிருக்கிறது.

இதைத் தடுக்க முடியாது என்றபோதும், பருவநிலை மாற்றப் பாதிப்பை கட்டுப்படுத்துவதற்கு தீவிர முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும்.

இந்த முயற்சியை தீவிரமாக எடுக்கத் தவறியதால், மழை எப்போது பெய்யும் என்பதே தெரியாமல் போயுள்ளது.

குறிப்பாக தமிழகத்தில் பருவ மழை வெகுவாக குறைந்துபோயுள்ள நிலையில், கடலோரப் பகுதிகளில் அபரிமிதமான மழை பெய்யும் நிலையும் உருவாகியிருக்கிறது.

ஐபிசிசி (பருவநிலை மாற்றத்துக்கான சர்வதேச குழு) அறிக்கையின்படி, 1990 முதல் 2090-ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் கடல் மட்டம் 18 முதல் 59 செ.மீ. வரை உயரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு கடலோரப் பகுதியில் குறிப்பாக வங்காள விரிகுடா பகுதியிலும் இதே அளவில் கடல் மட்டம் உயர வாய்ப்பு உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக தமிழகம் பேரழிவைச் சந்திக்க நேரிடும்.

இதுபோல் வெப்பநிலையும் அதிகரிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக தமிழகத்தின் வெப்பநிலை இந்த நூற்றாண்டின் இறுதியில் அதாவது 2100-ஆம் ஆண்டு இறுதியில் சராசரியாக 37.6 டிகிரி கூடுதலாக வாய்ப்பு உள்ளதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன என்றார்.

தமிழகத்தில் கடந்த மே மாதம் அதிகபட்ச வெயில் அளவு (வேலூர்) 108 டிகிரியாக இருந்தது. எனவே, இந்தப் புள்ளி விவரத்தின்படி 2100-ஆம் ஆண்டில் அதிகபட்ச வெப்பநிலை 145 டிகிரியாக உயரும் அபாயம் உள்ளது.

இந்தப் பருவநிலை மாற்றங்கள் மிகப் பெரிய பாதிப்புகளை ஏற்படுத்தும். குறிப்பாக நாகப்பட்டினம் கடல் பகுதிகளில் பாரம்பரிய மீன் வகைகள் முழுமையாக அழிந்துவிடும் அபாயம் உள்ளது. எனவே, பருவநிலை மாற்றப் பாதிப்புகளை கட்டுப்படுத்த முறையான நடைமுறைகள் வகுக்கப்பட்டு, அதற்கு செயல்வடிவம் கொடுக்க வேண்டும் என கருத்தரங்கில் வலியுறுத்தப்பட்டது.

**ஒரு வாரத்துக்குள் கிருஷ்ணா நீர்வரத்து அதிகரிக்க வாய்ப்பு**

ஒரு வாரத்துக்குள் சென்னைக்கு கிருஷ்ணா நீர் வரத்து அதிகரிக்க வாய்ப்புள்ளதாக பொதுப்பணித் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அப்போது விநாடிக்கு 1000 கன அடி தண்ணீர் கண்டலேறு அணையில் இருந்து திறந்து விடப்படும் என்றும் அவர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

கடந்த 1-ஆம் தேதி ஆந்திர மாநிலம் கண்டலேறு அணையிலிருந்து தமிழகத்துக்கு விநாடிக்கு 200 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டது. பின்னர் படிப்படியாக அதன் அளவு 500 கன அடியாக உயர்த்தப்பட்டது.

இந்த நிலையில், கிருஷ்ணா நீர் வழித்தடத்தில் அமைந்துள்ள உப்பளமதகு கால்வாயில் கசிவு ஏற்பட்டதால், திறந்து விடப்படும் தண்ணீரின் அளவு குறைக்கப்பட்டது. கால்வாய் சீரமைப்புப் பணிகள் நிறைவடைந்து, தற்போது 350 கன அடி நீர் திறந்து விடப்படுகிறது. இந்த அளவு விரைவில் 1000 கன அடி நீர் திறந்துவிட வாய்ப்புள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது குறித்து பொதுப்பணித் துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது: இன்னும் ஒரு வாரத்துக்குள் கண்டலேறு அணையில் திறந்துவிடப்படும் தண்ணீரின் அளவு 1000 கன அடியாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கிறோம்.

நீர் வரத்து அதிகரிக்கும் பட்சத்தில் சென்னையில் நிலவி வரும் குடிநீர்த் தட்டுப்பாடு ஓரளவு குறைய வாய்ப்புள்ளது என்றார் அவர்.

**இன்றும் மழை பெய்ய வாய்ப்பு**

தமிழகம், புதுச்சேரியின் சில இடங்களில் சனிக்கிழமை (ஜூலை 13) மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வங்கக் கடலில் ஒடிசா மற்றும் ஆந்திரத்துக்கு இடையே குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவானது. அது வலுவடைந்து நகரும் பட்சத்தில் தென் இந்திய பகுதியில் பெய்யும் மழையின் அளவு மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் தாழ்வு நிலை தற்போது வலுவிழந்து வருவதாக வானிலை மையத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இருப்பினும் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிக்கு அருகில் உள்ள மாவட்டங்களில் பலத்த மழை பெய்து வருகிறது.

வானிலை முன்னறிவிப்பு: தமிழகம், புதுச்சேரியின் சில இடங்களில் சனிக்கிழமை மழையோ அல்லது இடியுடன்கூடிய மழையோ பெய்யக்கூடும். வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி வரை பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்):

நடுவட்டம் - 40, வால்பாறை, தேவாலா - 30, சோளிங்கர், திருவள்ளூர் - 20.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**13.07.2013**

## விவசாயிகள் கவனத்திற்கு

பரமக்குடி: பரமக்குடி உழவர் பயிற்சி நிலைய அலுவலர் மீனாட்சி சுந்தரம் கூறியதாவது: அதிக முளைப்புத்திறன் உள்ள பூச்சி, நோய் தாக்காமல், போதிய ஈரப்பதத்துடன் இருக்கும் விதைகளை தேர்ந்தெடுக்க வேண்டும். இவற்றை பரிசோதனை செய்ய விரும்புவோர், நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ விதையின் பெயர், ரகத்தை குறிப்பிட்டு வேளாண் அலுவலர், விதைப்பரிசோதனை நிலையம், உழவர் பயிற்சி நிலையம், பரமக்குடி என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். ஒவ்வொரு விதை மாதிரிக்கும், 30 ரூபாய் கட்டணம் செலுத்த வேண்டும், என்றார்.

## வறட்சியால் குடிநீர் வழங்குவதில் ஊராட்சி தலைவர்கள் திணறல்

வத்தலக்குண்டு:வத்தலக்குண்டு ஒன்றியத்தில் உள்ள கிராம ஊராட்சிகளில் ஆழ்துளைக்கிணறுகள் வற்றி வருவதால், ஊராட்சி தலைவர்கள் குடிநீர் வினியோகம் செய்ய முடியவில்லை. வத்தலக்குண்டு ஒன்றித்தில் 17 கிராம ஊராட்சிகள், 3 பேரூராட்சிகள் உள்ளன. கூட்டு குடிநீர் திட்டங்கள் இருந்தாலும், வைகை ஆறு வற்றியதால் கிணறுகள் வறண்டு விட்டன. அனைத்து ஊராட்சிகளும் ஆழ்துளை கிணறுகள் மூலம் குடிநீர் வினியோகம் செய்து வருகின்றன. மழை பொய்த்ததால் ஆழ்துளை கிணறுகளிலும் குடிநீர் வற்றி வருகிறது. புதிதாக ஆழ்துளை கிணறுகள் அமைத்தாலும் நீர் கிடைக்கவில்லை. உள்ளாட்சி நிர்வாகங்கள் குடிநீரை சிக்கனமாக பயன்படுத்த பொதுமக்களை கேட்டு

கொண்டுள்ளன. சில ஊராட்சிகளில் அதிக திறன் கொண்ட மோட்டார்கள் இல்லாமல், குடிநீர் இருந்தும் வினியோகம் செய்ய முடியவில்லை. கடுமையான குடிநீர் பஞ்சம் ஏற்படும் என ஊராட்சி தலைவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். வரும் காலங்களில் குடிநீர் பஞ்சம் ஏற்படாமல் இருக்க கண்மாய், குளம், சிறு குட்டைகளை தூர் வார வேண்டும், நீர் நிலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளையும் அகற்ற வேண்டும் என ஊராட்சி தலைவர்கள் தெரிவிக்கின்றனர்.

## நலிவடையும் கயிறு திரிக்கும் தொழில்வருமானம் இல்லாமல் தவிப்பு

கீழக்கரை:கயிறு திரிக்கும் இயந்திரங்கள் வருகையால், கையால் கயிறு திரிக்கும் தொழில் நலிவடைந்து, ஏராளமான குடும்பத்தினர் போதிய வருமானம் இன்றி தவிக்கின்றனர்.பெரியபட்டினம் அருகே முத்துப்பேட்டை பரவர் தெருவில் 50க்கும் அதிகமான குடும்பத்தினர், பல தலைமுறைகளாக கயிறு திரிக்கும் தொழிலில் ஈடுபட்டு வந்தனர். விற்பனையில் ஏற்பட்ட தொய்வு, விலை சரிவால், ஏராளமானோர் கூலி வேலைக்கு சென்று விட்டனர். தற்போது 20க்கும் குறைவான குடும்பத்தினர், இந்த தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.கட்டில், சாரம், லாரி, மணிக்கொச்சம், மரக்கயிறு என ஐந்து வகையான கயிறுகளை தயார் செய்கின்றனர். பலவகை பயன்பாட்டுக்கு இவர்களின் தயாரிப்புகள் உதவியது. இந்த தொழிலி லும் இயந்திரங்கள் வந்துவிட்டது. கைத்தயாரிப்பு கயிறுகளுக்கு மவுசு குறைந்துவிட்டது.பிற மாவட்டங்களில் இருந்து கயிறு வரத்து அதிகரித்ததும், விலையில் சரிவு ஏற்பட்டது. இருப்பினும் மாற்றுத்தொழிலுக்கு செல்ல மனமின்றி, குறைந்த வருமானத்தில் வாழ்க்கை நடத்தி வருகின்றனர்.

இது குறித்து இத்தொழிலில் ஈடுபட்டுள்ள மோகன் கூறியதாவது: பல தலைமுறைகளாக செய்து வந்த தொழிலை விடக்கூடாது என்பதால், கடன் வாங்கி தொழில் செய்து வருகிறோம். எதிர்பார்க்கும் வருமானம் கிடைப்பதில்லை. எங்களுக்கு வங்கிகள் கடன் தருவதில்லை. மீன்கரைவலைக்கு நைலான் கயிறு

பயன்படுத்துவதால், கயிறு விற்பனை குறைந்து விட்டது. கயிறு பின்னும் நார் விலை அதிகரித்தும், எங்கள் கயிறுக்கு அதிக விலை கிடைக்கவில்லை. வங்கி கடன் கிடைக்க மாவட்ட நிர்வாகம், நடவடிக்கை எடுக்க வேண்டும், என்றார்.

## மழை நீர் சேகரிப்பை பின்பற்ற வேண்டும்

சிவகங்கை:""உள்ளாட்சி அமைப்பினர், வீடுகள், அலுவலக கட்டடங்களில் மழை நீர் சேகரிப்பு அமைப்பு அமைக்க கட்டாயம் வலியுறுத்த வேண்டும்," என, கலெக்டர் ராஜாராமன் பேசினார். சிவகங்கையில், குடிநீர் வடிகால் வாரியம் சார்பில், கிராம ஊராட்சி தலைவர்களுக்கு, மழை நீர் சேமிப்பின் அவசியம் குறித்த கருத்தரங்கு நடந்தது. கலெக்டர் தலைமை வகித்தார். கூடு தல் கலெக்டர் கிரண்குராலா முன்னிலை வகித்தார். உதவி இயக்குனர் (ஊராட்சிகள்) முகமது உமர் வரவேற்றார். குடிநீர் வடிகால் வாரிய உதவி நிர்வாக பொறியாளர் அம்பேத்கார், உதவி நீரியியல் வல்லுநர் சுப்புராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர். கலெக்டர் பேசுகையில், நிலத்திற்குள் 97 சதவீதம் உவர்ப்பு நீரும், 3 சதவீதம் நல்ல குடிநீரும் உள்ளன. இவற்றை முறையாக பயன்படுத்தி, மறு சுழற்சி செய்யும் வகையில், மழை நீரை சேகரிக்க வேண்டும். அப்போது தான், நிலத்தடி நீர் மட்டம் சீராக இருக்கும். உள்ளாட்சி அமைப்பினரும், மழை நீர் சேகரிப்பு அமைப்புகள் அனைத்து வீடுகள், அலுவலகங்களில் ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும், என்றார்.

## அக்ரோ சர்வீஸ் மையங்களில் "ஓய்வு' எடுக்கும் டிராக்டர்கள்: விவசாயிகள் கடும் ஏமாற்றம்

திருநெல்வேலி:தமிழகத்தில் பல்வேறு அக்ரோ சர்வீஸ் மையங்களில் காட்சி பொருளாக டிராக்டர்கள் ஓய்வு எடுப்பதால் விவசாயிகள் கடும் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் பரவலாக வேளாண்மை இன்ஜினியரிங்

மற்றும் சேவை கூட்டுறவு மையங்கள் செயல்பட்டு வருகிறது. இந்த மையங்களில் விவசாயிகளின் நலனுக்காக டிராக்டர்கள் வாங்கப்பட்டு அவர்களின் பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் பல்வேறு கூட்டுறவு மையங்களில் இந்த டிராக்டர்கள் தனி நபர் பயன்பாட்டிற்கு பயன்படுகிறது. மேலும், சில மையங்களில் பழுதடைந்து காட்சி பொருளாக காணப்படுவதால் விவசாயிகள் ஏமாற்றம் அடைந்துள்ளதோடு கடும் அதிருப்தி அடைந்துள்ளனர்.நெல்லை மாவட்டத்தில் ஆலங்குளம் உட்பட ஒரு சில மையங்களில் இந்த மையங்கள் செயல்படுகிறது. இங்கிருந்த டிராக்டர் தனியார் அரிசி ஆலைக்கு பயன்பட்டு வந்ததாகவும், தற்போது பழுதடைந்த காரணத்தால் இந்த டிராக்டர்கள் "ஓய்வு' எடுத்து வருவதாவும் புகார் கூறப்படுகிறது. இப்பிரச்னை தொடர்பாக இந்த வேளாண்மை பொறியியல் மற்றும் சேவை கூட்டுறவு மைய இயக்குனர் பாலகிருஷ்ணன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு புகார் மனுக்களை அனுப்பியுள்ளார்.தற்போது இந்த கூட்டுறவு மையங்களில் புதியதாக நிர்வாகிகள் பதவியேற்றுள்ள நிலையில் பழுதடைந்துள்ள டிராக்டர்களை பழுது பார்த்து விவசாயிகளின் பயன்பாட்டிற்கு கொண்டு வர சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று விவசாயிகள் விரும்புகின்றனர்.

## களக்காட்டில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

களக்காடு:களக்காட்டில் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு நான்குநேரி தாசில்தார் சரவணன் தலைமை வகித்தார். களக்காடு புலிகள் காப்பக துணை இயக்குநர் சேகர், மாவட்ட கவுன்சிலர் ராஜேந்திரன், டவுன் பஞ்.,தலைவர் பி.சி. ராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.கூட்டத்தில் ஏற்கனவே பெறப்பட்ட மனுக்களுக்கு பதில் கூறப்பட்டது. இக்கூட்டத்தில் விவசாயிகள் தங்கள் பகுதியில் செய்ய வேண்டிய பணிகள் குறித்து பேசினர்.

விவசாயிகளின் கோரிக்கை குறித்து அரசுக்கு அறிக்கை அனுப்பப்படும் என அதிகாரிகள் கூறினர். கூட்டத்தில் கலந்து கொண்ட விவசாய சங்க தலைவர் அய்யம்பெருமாள் பேசுகையில் :-வாழைக்கு ரூ.3 நஷ்டஈடு காணாது. கூடுதல் தொகை வழங்க வேண்டும் என்றார். சுகுமாரன், அப்துல் மஜீத், முத்துகிருஷ்ணன் உட்பட பல்வேறு விவசாயிகள் தங்கள் கோரிக்கைகளை எடுத்து கூறினர். காடன்குளத்தை தூர்வாரி மடைகளை சீர் செய்ய வேண்டும் உள்ளிட்ட பல்வேறு மனுக்களுக்கு உரிய நடவடிக்கை எடுப்பதாக பதில் கூறப்பட்டது.
கூட்டத்தில் சமூக பாதுகாப்பு திட்ட தாசில்தார்கள் விமலாராணி, சங்கரநாராயணன், துணை தாசில்தார் ராமச்சந்திரன், வருவாய் ஆய்வாளர்கள் வேல்முருகன், விஜய்ஆனந்த், டவுன் பஞ்.,துணை தலைவர் ஐசக்சாலமன், கவுன்சிலர்கள் லக்கிராஜா, மஜீத், சர்தார், நிர்வாக அதிகாரி முத்துக்குமார், முருகன், வேளாண்மை உதவி இயக்குநர்கள் அசோக் கென்னடி, சுஜாதா பாய், சுப்புலட்சுமி உட்பட பலர் கலந்து கொண்டனர். விவசாயிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

## வரும் 18ல் தூத்துக்குடி மாவட்டவிவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்

தூத்துக்குடி:தூத்துக்குடி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கப்ட்டம் வரும் 18ம் தேதி நடக்கிறது. இதில் விவசாய சங்க தலைவர்கள், நிர்வாகிகள் திரளாக கலந்து கொள்ளுமாறு கலெக்டர் அழைப்பு விடுத்துள்ளார்.இது குறித்து வெளியிடப்பட்ட அறிக்கையில் கப்றியிருப்பதாவது;ஒவ்வொரு மாதமும் நடந்து வரும் தூத்துக்குடி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் இந்த மாதம் வரும் 18ம் தேதி வியாழக்கிழமை காலை 11 மணிக்கு கலெக்டர் ஆஷீஷ்குமார் தலைமையில் கலெக்டர் அலுவலகத்தில் நடக்கிறது.கப்ட்டத்தில் விவசாய சங்க தலைவர்கள், பாசன சங்க பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகள் திரளாக கலந்து

கொண்டு பயன்பெற வேண்டும்.இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆடிப்பட்டத்தில் திருந்திய நெல் சாகுபடி

கிருஷ்ணகிரி: "ஆடி பட்டத்தில், இரட்டிப்பு மகசூல் கிடைக்க விவசாயிகள் திருந்திய நெல் சாகுபடி முறையை கையாள வேண்டும்' என, உழவர் பயிற்சி நிலைய வேளாண் துணை இயக்குனர் (பொ) பச்சையப்பன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.அவர் வெளியிட்ட அறிக்கை:கர்நாடகா மாநிலத்தில் பருவமழை நன்றாக பெய்துள்ளதால், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கே.ஆர்.பி., அணை, கெலவரப்பள்ளி அணை, பாரூர் ஏரி ஆகிய முக்கிய நீர் தேக்கங்களுக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது. இந்த நீர் நிலைகளில் இருந்து முதல் போக நெல் சாகுபடிக்கு தண்ணீர் திறக்கப்படவுள்ளது.ஆடிப்பட்டத்துக்கு தேவையான முக்கிய நெல் ரகங்களான, ஜலகரபொன்னி, பொன்னி, வெள்ளை பொன்னி, ஏ.டி.டி., 38 மற்றும் பையூர்-1 ஆகியவற்றை பயன்படுத்தி ஏக்கருக்கு மூன்று கிலோ விதை வீதம் திருந்திய நெல் சாகுபடி முறையில் நடவு செய்து இரட்டிப்பு மகசூலை பெறலாம்.திருந்திய நெல் சாகுபடி முறையில், நெல் விதைக்கும் முன் நாற்றங்கால் தயாரிப்பு மிகவும் முக்கியம். ஒரு ஏக்கருக்கு தேவையான மூன்று சென்ட் பரப்பில் பாலித்தின் விரிப்புகளை பரப்பிவிட்டு அதில், 70 சதவீதம் மண்ணும், 20 சதவீதம் நன்கு மக்கிய தொழு உரமும், 10 சதவீதம் நெல் உமி மற்றும் இரண்டு கிலோ 17:17:17 உரமும் கலக்க வேண்டும்.இதன் பின் தலா இரண்டு பாக்கெட், "அசோஸ்பைரில்லம்', "பாஸ்போ பக்டீரியாவில்' விதை நேர்த்தி செய்து, நான்கு மணி நேரம் உலர வைத்து, 24 மணி நேரம் தண்ணீரில் ஊற வைத்து முளைப்பு திறன் உள்ள விதைகளை நாற்றங்காலில் விதைக்க வேண்டும்.
நாற்றங்காலுக்கு பூந்தொட்டி கொண்டு ஒரு நாளைக்கு இரண்டு அல்லது மூன்று முறை தண்ணீர் விடவேண்டும். 15 நாட்கள் வயதான நாற்றுகள் வயலில் நடவுக்கு

மிகவும் உகந்ததாகும். நாற்றுகளை பிடுங்கும் இரண்டு நாட்களுக்கு முன் தண்ணீர் பாய்ச்சுவதை நிறுத்த வேண்டும். இறுகிய மண்ணாக இருந்தால், ஐந்து கிலோ ஜிப்சம் இட்டு நாற்றுகளை பிடுங்கி நடவு செய்ய வேண்டும்.நன்கு உழவு செய்து, சமப்படுத்தப்பட்ட வயலில், 23க்கு 23 செ.மீ., இடைவெளியில் நாற்றுகளை சதுர வடிவ முறையில் நட வேண்டும். நட்ட ஏழு முதல், 10 நாட்களில் விடுபட்ட இடங்களை நிரப்ப வேண்டும்.களைகளை கட்டுப்படுத்த நட்ட, 10வது நாளில் இருந்து, 10 நாட்களுக்கு ஒரு முறை கோனோவீடர் களைகருவியை கொண்டு மொத்தம் நான்கு முறை களையெடுக்க வேண்டும். தேவைப்பட்டால் ஒரு முறை கைக்களைப்பும் செய்யலாம்.

மாவட்டத்தில் நெல்லுக்கு தேவையான உரமானது அரசு நிர்ணயப்படி, 60:20:20 கிலோ தழை, மணி மற்றும் சாம்பல் சத்து என்ற அளவில் கொடுக்க வேண்டும். மணிச்சத்து அடியுரமாகவும், தழை மற்றும் சாம்பல் சத்து மூன்று தருணங்களில் பிரித்தும் அளிப்பது பயிருக்கு மிகவும் நல்லது. இலை வண்ணட அட்டையை கொண்டும் தழைச்சத்து அளிக்கலாம்.ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு செய்து, ஆரோக்கியமான சூழலில் பயிர்களை வளர்த்து மகசூலை அதிகரிக்க வேண்டும். திருந்திய முறையில் நெல் சாகுபடி செய்யும் போது ஹெக்டேருக்கு ஒன்பது முதல், 11 மெட்ரிக் டன் வரை மகசூல் பெற வாய்ப்புள்ளது.

## குறுவை சாகுபடிக்கு போதுமான உரம் இருப்புதமிழக விவசாயத்துறை அமைச்சர் தகவல்

திருச்சி: ""குறுவை சாகுபடிக்கு தேவையான உரங்கள் போதுமான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது," என்று வேளாண்துறை அமைச்சர் தாமோதரன் பேசினார். திருச்சி மாவட்டம், லால்குடி ஸ்ரீதேவி மஹாலில், குறுவை நெல் சாகுபடி சிறப்பு தொகுப்பு திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கு இடுபொருட்கள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடந்தது.இதில், விவசாயத்துறை அமைச்சர்

தாமோதரன், கதர்த்துறை அமைச்சர் பூனாட்சி, அரசு கொறடா மனோகரன், வேளாண் உற்பத்தி கமிஷனர் சந்தீப் சக்சேனா, வேளாண்துறை இயக்குனர் ராஜேந்திரன், கலெக்டர் ஜெயஸ்ரீ, எம்.எல்.ஏ.,க்கள் சந்திரசேகர், இந்திராகாந்தி, மாவட்ட பஞ்சாயத்து தலைவர் ராஜாத்தி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.விவசாயிகளுக்கு இலவச இடுபொருட்களை வழங்கி, வேளாண்துறை அமைச்சர் தாமோதரன் பேசியதாவது:கடந்த, 2011ம் ஆண்டு ஜூன், ஆறாம் தேதியே மேட்டூரில் தண்ணீர் திறக்க உத்தரவிட்டார். அதனால் விளைச்சல் அதிகரித்து, இந்தியாவிலேயே தமிழகத்தில் தான், 101 லட்சம் மெட்ரிக்., டன் நெல் உற்பத்தி செய்யப்பட்டு, முதல் பரிசும் பெறப்பட்டது.கடந்தாண்டு மழையில்லாமல் ஏற்பட்ட வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, ஆயிரத்து, 300 கோடி ரூபாய் வறட்சி நிவாரணம் தமிழக முதல்வரால் வழங்கப்பட்டது. இதனால், 20 லட்சம் குடும்பங்கள் வேறு தொழிலுக்கு மாறாமல் பயனடைந்தனர்.

காவிரியில் இந்தாண்டு குறுவை சாகுபடிக்கு பாசன நீர் கிடைக்க பெறாததாலும், மேட்டூர் அணையில் குறைந்த அளவே தண்ணீர் உள்ள அசாதாரண சூழ்நிலையில், ஆழ்குழாய் கிணறு கொண்டு குறுவை சாகுபடி செய்துள்ள டெல்டா விவசாயிகளின் வாழ்வாதாரத்தை காக்கும் வகையில், குறுவை சாகுபடி சிறப்பு திட்டத்துக்காக, 18 கோடி ரூபாயை முதல்வர் ஒதுக்கியுள்ளார்.அதன்படி, திருச்சி மாவட்டத்தில் குறுவை சாகுபடிக்கு திட்டமிடப்பட்டுள்ள, 7,507 ஏக்கருக்குரிய, 3,872 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு, உயிர் உரங்கள், நுண்சத்து மற்றும் தாவர பூச்சிக்கொல்லி மருந்துகள், பைப்புகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.திருச்சி மாவட்டத்துக்கு மட்டும் குறுவை சாகுபடி சிறப்பு திட்டத்தின் கீழ், 32.38 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுவரை மாவட்டத்தில், 1,275 ஏக்கரில் குறுவை நடவுப்பணிகள் முடிந்துள்ளது. மாவட்டத்தில் குறுவை சாகுபடிக்காக, யூரியா, 5,997 மெட்ரிக்., டன், பொட்டாஷ்,

3,398 மெட்ரிக்., டன், கலப்பு உரம், 5,010 மெட்ரிக்., டன் ஆகியவை, தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி மற்றும் தனியார் உரக்கடைகளிலும் போதிய அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது.இவ்வாறு அமைச்சர் பேசினார்.

### ஆடிப்பட்டத்தில் வெங்காயம்வேளாண் அதிகாரி "அட்வைஸ்'

கரூர்: "ஆடிப்பட்டத்தில் சின்ன வெங்காயம் சாகுபடி செய்தால், கூடுதல் லாபம் பெறலாம்' என, வேளாண் உள்நாட்டு சந்தை மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மைய இயக்குநர் அஜ்ஜன் தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்ட அறிக்கை:தமிழகத்தில் சின்ன வெங்காயம் சாகுபடி லாபகரமான தொழிலாக உள்ளதால், ஆண்டு முழுவதும் விவசாயிகள், சாகுபடி செய்து வருகின்றனர். இதில், 70 சதவீதத்துக்கு மேல் தேனி, திண்டுக்கல், மதுரை, திருச்சி ஆகிய மாவட்டங்களில் சாகுபடி செய்யப்படுகிறது. கடந்த ஏப்ரல் முதல் ஜூன் வரை வரத்து குறைவினால், சின்ன வெங்காயத்தின் பண்ணை விலை ஒரு கிலோ 45 ரூபாய் முதல் 80 ரூபாய் வரை இருந்தது.

கர்நாடகா மாநிலத்தில் இருந்து, தமிழகத்துக்கு சின்ன வெங்காயம் வரத்து துவங்கியுள்ளது. இந்த மாத இறுதி வரை வரத்து நீடிக்கும் என தெரிகிறது. மைசூர் வெங்காயத்தின் விலை 55 ரூபாயில் இருந்து 60 ரூபாய் வரை உள்ளது.

குறைந்தளவு உற்பத்தியால் சின்ன வெங்காயம் ஏற்றுமதிக்கு வாய்ப்பில்லை.

தமிழகத்தில் கோ-5 ரக சின்ன வெங்காயம் அதிகளவில் பயிரிடப்பட்டுள்ளது.தற்போது சாகுபடி செய்யப்படும் சின்ன வெங்காயம், வரும் செப்டம்பர், அக்டோபர் மாதங்களில், அறுவடையின் போது பண்ணை விலை 45 ரூபாய்க்கு மேல் இருக்க வாய்ப்புள்ளது. சிறந்த தரமான சின்ன வெங்காயத்தின் விட்டம் 27 மில்லி மீட்டருக்கு மேலேயும், வட்ட வடிவத்துடன் மற்றும் இளஞ்சிவப்பு முதல் சிகப்பு நிறத்துடன் இருக்க வேண்டும். மேற்கண்ட தரத்தில்

ஆடிப்பட்டத்தில் வெங்காய சாகுபடி செய்தால், கூடுதல் லாபம் கிடைக்கும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### மேட்டூர் அணை நீர்மட்டம்17 நாளில் 50 அடி உயர்வு

மேட்டூர்: கபினி உபரி நீர் திறப்பு குறைந்ததால், மேட்டூர் அணை நீர்வரத்து நேற்று வினாடிக்கு, 14,042 கனஅடியாக சரிந்தது. கடந்த, 17 நாளில் நீர்மட்டம், 50 அடி அதிகரித்துள்ளது.காவிரி நீர்பிடிப்பு பகுதியில் தென்மேற்கு பருவமழை தீவிரம் குறைந்ததால் கர்நாடகாவின் கபினி உபரி நீர்திறப்பு, 10,000 கனஅடியாக குறைக்கப்பட்டது. கே.ஆர்.எஸ்., அணையில் இருந்து வினாடிக்கு, 5,000 கனஅடி நீர் காவிரியில் வெளியேற்றப்பட்டது.கபினி உபரி நீர்திறப்பு குறைந்ததால் நேற்று முன்தினம் வினாடிக்கு, 23,128 கனஅடியாக இருந்த மேட்டூர் அணை நீர்வரத்து, நேற்று வினாடிக்கு, 14,042 கனஅடியாக சரிந்தது. தொடர் நீர்வரத்தால் நேற்று முன்தினம், 64.550 அடியாக இருந்த மேட்டூர் அணை நீர்மட்டம் நேற்று, 65.720 அடியாக உயர்ந்து.மேலும், நேற்று முன்தினம், 28.194 டி.எம்.சி.,யாக இருந்த நீர் இருப்பு, 29.133 டி.எம்.சி.,யாக அதிகரித்தது. நேற்று அணை நீர்மட்டம், ஒரு அடியும், நீர் இருப்பு, ஒரு டி.எம்.சி.,யும் அதிகரித்தது. கடந்த, 17 நாளில் நீர்மட்டம், 50 அடியும், நீர் இருப்பு, 26 டி.எம்.சி.,யும் அதிகரித்துள்ளது.

### மானிய விலையில்நெல்விதை விற்பனை

ராசிபுரம்: "நாமகிரிப்பேட்டை வட்டார வேளாண் விரிவாக்க மையத்தில், மானிய விலையில் நெல்விதை வழங்கப்படுகிறது' என, உதவி இயக்குநர் கிருஷ்ணவேணி தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்ட அறிக்கை:நாமகிரிப்பேட்டை வட்டாரத்தில், நெல் இயக்கம் மற்றும் விதை கிராமத் திட்டங்களின் கீழ், விவசாயிகளுக்கு மானிய விலையில், நெல் விதைகள் வழங்கப்பட்டு வருகிறது. சான்று பெற்ற நெல் ரகம், 10 ஆயிரம் கிலோ, தற்போது, நாமகிரிப்பேட்டை வட்டார வேளாண் விரிவாக்க மையம் மற்றும் முள்ளுக்குறிச்சி துணை வேளாண் விரிவாக்க மையத்தில், இருப்பு

வைக்கப்பட்டுள்ளது.இவற்றை தேசிய வேளாண்மை வளர்ச்சித்திட்டம்-நெல் இயக்க திட்டத்தின் கீழ், ஐந்து ரூபாய் மானியமும், விதை கிராமதிட்டத்தின் கீழ், 50 சதவீத மானியத்தில் வினியோகம் செய்கிறோம். இந்த மானியத்தை பயன்படுத்தி, நெல் விதைகளை பெற்று திருந்திய நெல் சாகுபடி முறையில், விவசாயம் செய்து நாமகிரிப்பேட்டை விவசாயிகள் பயன்பெறலாம்.இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

## 13.07.2013

### கபினி உபரி நீர்திறப்பு குறைந்தது மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 14,000 கனஅடியாக சரிந்தது



மேட்டூர் : மேட்டூர் அணைக்கு நீர் வரத்து விநாடிக்கு 14 ஆயிரம் கனஅடியாக குறைந்துள்ளது. இதனால் அணையில் இருந்து டெல்டா பாசனத்திற்கு நீர் திறப்பு மேலும் தாமதமாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. காவிரியின் நீர் பிடிப்பு பகுதியில் பெய்யும் மழையை பொறுத்து கபினி அணையில் இருந்து உபரி நீர் திறந்து விடப்படுகிறது. கடந்த இரு தினங்களாக மழை குறைந்ததால் உபரி நீர் திறப்பும் குறைந்துள்ளது. இதனால் மேட்டூர் அணைக்கு நீர் வரத்து குறைந்துள்ளது.

நேற்று காலை 8 மணி நிலவரப்படி விநாடிக்கு 14,042 கனஅடி வீதம் நீர் வந்து கொண்டிருந்தது. நேற்று முன்தினம் விநாடிக்கு 23,128 கனஅடி நீர் வந்தது. ஒரே நாளில் விநாடிக்கு 9 ஆயிரம் கனஅடி குறைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. நேற்று காலை அணையின் நீர்மட்டம் 65.72 அடியாக இருந்தது. நீர் இருப்பு 29.13 டிஎம்சியாகவும் உள்ளது. அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக விநாடிக்கு 3

ஆயிரம் கனஅடி நீர் திறக்கப்படுகிறது.

மேட்டூர் அணை நீர்மட்டம் வேகமாக உயரும் பட்சத்தில் இந்த மாத இறுதியில் டெல்டா பாசன பகுதிக்கு தண்ணீர் திறக்கப்படும் என விவசாயிகள் எதிர்பார்த்தனர். நீர் வரத்து குறைந்து வருவதால் தண்ணீர் திறப்பு மேலும் தாமதமாகும் சூழல் இருப்பதாகவும் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

**சுங்க வரியை உயர்த்தியதால் சர்க்கரை இறக்குமதி விரைவில் குறையும்**



புதுடெல்லி : சர்வதேச சந்தையில் சர்க்கரை விலை வீழ்ச்சியடைந்துள்ளது. உள்நாட்டு சர்க்கரையை விட வெளிநாட்டு சர்க்கரை விலை குறைவாக இருப்பதால், வர்த்தகர்கள் பலர் அதை நாட ஆரம்பித்தனர். இதனால், உள்நாட்டு சர்க்கரை ஆலைகள் கடுமையாக பாதிக்கப்பட்டன. மேலும், கரும்பு விவசாயிகளுக்கு அவர்கள் தர வேண்டிய நிலுவைத் தொகையையும் தர முடியவில்லை.

இதையடுத்து, சர்க்கரை இறக்குமதி வரியை 10 சதவீதத்தில் இருந்து 40 சதவீதமாக உயர்த்த கோரிக்கை விடுக்கப்பட்டு வந்தது. இதை பரிசீலித்த மத்திய அரசு இறக்குமதிக்கான சுங்கவரியை 10 சதவீதத்தில் இருந்து 15 சதவீதமாக உயர்த்தியது. இதனால் மேலும் வரியை உயர்த்த சர்க்கரை ஆலைகள் தரப்பில்

வலியுறுத்தப்பட்டது. இந்நிலையில், மத்திய வேளாண் துறை அமைச்சர் சரத்பவார் கூறியதாவது: சர்க்கரை இறக்குமதிக்கான சுங்க வரியை மேலும் உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்க முடியாது.

இப்போது உயர்த்தப்பட்டுள்ள 15 சதவீத வரியினாலேயே, சர்க்கரை இறக்குமதி பெருமளவில் குறையும். இப்போதைக்கு இறக்குமதி குறைவது நல்ல விஷயம்தான். ஏனெனில், சர்க்கரை ஆலை கிடங்குகளில் ஏராளமான அளவு சர்க்கரை தேங்கிக் கிடக்கிறது. நாடு முழுவதும் உள்ள கரும்பு விவசாயிகளுக்கு ரூ.9000 கோடி நிலுவை தொகை உள்ளது என்றார்.

**முட்டை விலை 10 காசு குறைந்தது**



நாமக்கல்: நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை 10 காசு குறைந்து, ஒரு முட்டை 320 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில் நேற்று தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு கூட்டம் நடந்தது. கோழிப்பண்ணையாளர்கள் மற்றும் வியாபாரிகள் பங்கேற்று விற்பனை நிலவரம் குறித்து ஆலோசித்தனர். முட்டை விலையில் மேலும் 10 காசுகள் குறைக்க முடிவு செய்யப்பட்டது. இதையடுத்து, முட்டையின் பண்ணை கொள்முதல் விலை 330 காசில் இருந்து 320 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது. கடந்த 10 நாளில் முட்டை விலை 53 காசுகள் வரை குறைந்துள்ளது.

**19 மாவட்டங்களில் 37 சேமிப்பு கிடங்குகள் கட்ட முதல்வர் உத்தரவு**



சென்னை : காஞ்சிபுரம், திருவள்ளூர், தஞ்சாவூர், கோவை, தூத்துக்குடி உள்ளிட்ட 19 மாவட்டங்களில் ரூ.117 கோடி செலவில் 37 சேமிப்பு கிடங்குகள் கட்ட முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். தமிழகத்தில் கொள்முதல் செய்யப்பட்ட தானியங்களை சேமித்து வைக்க  நவீன வசதிகளு டன் கூடிய சேமிப்பு கிடங்குகளை கட்டுவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது. உற்பத்தி செய்யப்பட்ட உணவு தானியங்களை சேமித்து வைக்க 6.68 லட்சம் டன் கொள்ளளவு வசதி கொண்ட கிடங்குகள் தற்போது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்திடம் உள்ளன.

தானியங்களை சேமித்து வைக்க கூடுதல் சேமிப்பு கிடங்குகள் அவசியம் என்பதை கருத்தில் கொண்டு 19 மாவட்டங்களில் நவீன வசதியுடன் கூடிய 47 சேமிப்பு கிடங்குகள் கட்ட முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். இதில் தற்போது முதற்கட்டமாக ரூ.117 கோடியே 20 லட்சம் செலவில் நவீன வசதிகளுடன் கூடிய 1,46,500 டன் கொள்ளளவு கொண்ட 37 சேமிப்பு கிடங்குகள் கட்ட ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, தஞ்சாவூர், கோவை, கிருஷ்ணகிரி, விழுப்புரம், புதுக்கோட் டை, சிவகங்கை, நாமக்கல், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருப்பூர், தூத்துக்குடி,

திருவள்ளூர், திருச்சி, கரூர், ராமநாதபுரம், ஈரோடு, தருமபுரி, சேலம் மற்றும் வேலூர் ஆகிய 19 மாவட்டங்களில் நுகர்பொருள் வாணிப கழகத்தின் மூலம் நவீன வசதியுடன் கூடிய சேமிப்பு கிடங்குகள் கட்டப்படும். இவ்வாறு அரசு அறிக் கையில்  கூறப்பட்டுள்ளது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**13.07.2013**

**நல்ல விலை கிடைப்பதால் வாழை நடுவதில் கவனம் செலுத்தும் பந்தலூர் விவசாயிகள்**

பந்தலூர்,

நல்ல விலை கிடைப் பதால் பந்தலூர் பகுதி விவசாயிகள் வாழைகள் நடுவதில் கவனம் செலுத்தி வருகின்றனர்.

**வாழை விவசாயம்**

பந்தலூர் தாலுகா அய்யங் கொல்லி அருகே கள்ளிச்சால் கைதகொல்லி, கூழால் ,புஞ்சை கொல்லி உள்பட பல பகுதி களில் நூற்றுக்கணக்கான விவ சாயிகள் தேயிலை, வாழை உள்ளிட்ட விவசாயம் செய்து வந்தனர். கடந்த ஆண்டு போதிய பருவமழை இல்லா மல் போனதால் குறிப்பிட்ட விவசாயம் பெரிதும் பாதிக்கப் பட்டது.

இந்த நிலையில் தற்போது பருவமழை தீவிரமாக பெய்து வருகிறது. மேலும் கடந்த ஆண்டு விளைச்சல் இல்லா மல் போனதால் வாழை தார்க ளின் விலை உயர்ந்து உள்ளது. இதனால் நல்ல விலை கிடைக் கும் என்ற நம்பிக்கையில்வாழை விவசாயத்தைவிவசாயிகள் மேற்கொண்டு உள்ளனர். இதற்குஏற்ப மழையும் பெய்து வருவதால் பந்தலூர் பகுதியில் வாழை விவசாயம் களைகட்டி உள்ளது.

**நல்ல விலை**

இதனிடையே 1 கிலோ வாழைக்காய் ரூ.36 வரை விற்கப்படுகிறது. மேலும் நடவு செய்வதற்கான வாழைக்கன்று களின் விலையும் கணிசமாக அதிகரித்து உள்ளது. ஒரு வாழை கன்று ரூ.8 முதல் 10 வரை விற்கப்படுகிறது. மேலும் நல்ல விலை கிடைத்து வருவ தால் வாழை விவசாயத்தின் மீது விவசாயிகள் கவனம் செலுத்தி வருகின்றனர். இத னால் போதிய நடவுக்கன்று களும் கிடைப்பதில்லை.

ஏற்கனவே நடவு செய்த வாழைகள் நன்கு விளைந்து உள்ளன. இதனால் அறுவடை செய்யும் வாழை தார்கள் கோவை, மேட்டுப்பாளையம், ஈரோடு, திருப்பூர், கொச்சின், கோழிக்கோடு உள்ளிட்ட பகு திகளுக்கு லாரிகளில் அனுப் பப்பட்டு வருகிறது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.